**07.11.2025** **அசல் வழக்கு எண். 264/2008 Starting Time : 3.42 p.m.**

**வா.சா.2 திரு. பாஸ்கரன் த/பெ. ஏழுமலை.**

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1).** என் தாத்தா பெயர் என்ன என்றால் நாராயணசாமி ஆகும். என் தாத்தா நாராயணசாமியின் உடன் பிறந்தவர்களின் பெயர் என்ன என்றால் தெரியாது. வாதியின் தாத்தா துரைசாமி குடும்பத்தினருக்கும், எங்களது குடும்பத்தினருக்கும் ஏதேனும் சம்பந்தம் உள்ளதா என்றால் இல்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் உயில் ஆவணத்தை படித்து பார்த்ததால் தான் தெரியும். மேற்படி உயிலை எழுதி வைத்த விவரமும் மற்றும் வாதியின் குடும்ப விவரங்களும் எனக்கு வாதி சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான்.

**2).** இந்த வழக்கிற்கு பின்னிட்டு உயிலை என்னிடம் காட்டிய பிறகு தான் இந்த விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியவந்தது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.1 ஆவணமான உயில் ஆவணமான இந்த ஆவணத்தை காண்பித்தாரா அல்லது அசல் ஆவணத்தை காண்பித்தாரா என்றால் இரண்டு ஆவணங்களையும் காட்டினார். உயில் ஆவணத்தில் கையெழுத்து போட்ட நபர்களின் விவரம் எனக்கு தெரியுமா என்றால் படித்து பார்த்தேன், ஆனால் எனக்கு தெரியாது. நான் தற்போது இந்த வழக்கிற்கு சாட்சி சொல்வதற்காக தான் சென்னையில் இருந்து வந்தேனா என்றால் சாட்சியம் அளிப்பதற்காக தான் வந்தேன்.

**3).** நான் குடும்பத்துடன் சென்னையில் செட்டிலாகி 15,20 ஆண்டுகள் ஆகுமா என்றால் சரியல்ல, 6 ஆண்டுகள் ஆகிவிட்டது. வழக்கில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களுக்கு அருகில் எனக்கு பாத்யப்பட்ட சொத்துக்கள் உள்ளதா என்றால் இல்லை. என் குடும்ப சொத்துக்கள் ஏதேனும் வழக்கு சொத்திற்கு அருகில் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்துக்களை பிரதிவாதி அனுபவித்து வருவதாக வாதி குறிப்பிட்டுள்ளபட்சத்தில், எவ்வளவு வருடங்களாக பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் கடந்த 1986ல் இருந்து அனுபவித்து வருகிறார்.

பிரதிவாதிகளுக்கு இந்த சொத்துக்கள் எவ்வாறு கிடைத்தது என்றும், எதன் அடிப்படையில் அனுபவித்து வருகிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

**4**). ராமகிருஷ்ணன், சிவராஜ், சுப்பிரமணி ஆகியோர்களிடமிருந்து பலராமன் கிரயம் பெற்றுள்ளதாக வாதி கூறியுள்ளபட்சத்தில், மேற்படி நபர்களை எனக்கு தெரியுமா என்றால் சிவராஜ் என்பவரை மட்டும் எனக்கு தெரியும். வழக்கு சொத்துக்களை சிவராஜ் குடும்பம் அனுபவித்து வந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதிகளின் தாத்தா பலராமனை தெரியுமா என்றால் தெரியும். பிரதிவாதிகளின் தாத்தா பலராமன் சிவராஜ் குடும்பத்தினரிடம் இருந்து கிரயம் பெற்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பலராமனின் பேரன்களுக்குள் பாகப்பிரிவினை ஏற்பட்டு அதன் அடிப்படையில் வழக்கு சொத்துக்களை அனுபவித்து வருகிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் பிரதிவாதிகள் சொத்தை அனுபவித்து வருகிற விவரம் தெரியும், ஆனால் எதன் அடிப்படையில் என்று தெரியாது.

**5**). எனது அம்மாவின் தங்கையை வாதி பழனிவேல் என்பவருக்கு திருமணம் செய்துக் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அதற்கு பின்னிட்டு தான் வாதியை எனக்கு தெரியுமா என்றால் எனது சிறு வயது முதற்கொண்டே அவரை எனக்கு தெரியும். வாதி எனக்கு வேண்டப்பட்டவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உயில் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. உயில் படி வாதி எந்த சொத்தையும் அனுபவித்து வரவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> - இல்லை.**

**Ending time : 4.00 p.m.**

Taken down by me in Open court read over to the witness in the presence of the Plaintiff/Defendant and admitted by him/her to be correct.

Sd/-C. Mahalakshmi,
District Munsif,
Vandavasi.